தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 7, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஆகஸ்ட் 23, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்"

பிறர் பொருளையும் தம் பொருளாக நினைத்து நடுவுநிலைமை தவறாது வாணிபம் செய்வதுதான் வணிகர்களுக்கு உரிய வாணிப முறை ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

சுரங்கப் பாதை

***2257—திரு. ஆர். காந்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை தொகுதி, வன்னிவேடு ஊராட்சி, சென்னை—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் தேவதானம்—வன்னிவேடு இடையே சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னை—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில், இராணிப்பேட்டை தொகுதி, வன்னிவேடு ஊராட்சி, தேவதானம்—வன்னிவேடு இடையே சுரங்கப்பாதை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.*

திரு. ஆர். தங்கதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என தவ வாழ்வு வாழ்ந்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆசியுடன், இரட்டை இலை சின்னம் தொடங்கிய காலத்திலிருந்தே தொடர்ந்து வெற்றியைத் தந்துகொண்டிருக்கின்ற தொகுதியாகும். அந்தத் தொகுதியில் எதிர்க்கட்சிகள் எட்டிப் பார்த்ததே இல்லை. நிலக்கோட்டை தொகுதியில் மழை இல்லாத காரணத்தால், சுமார் 400 கிராமங்களில் உள்ள மக்கள் குடிதண்ணீருக்காகக் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, ஆண்டிப்பட்டி, வைகை அணையிலிருந்து சிறிது காலம் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கேள்வியானது, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியாக இருப்பதால், இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை தமிழக விவசாயிகளுக்கு ஓர் அத்தியாவசியமான துறையாக இருந்து, விவசாயப் பெருமக்களைப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை நன்றாகப் பார்த்துவிட்டுக் கேளுங்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *இது பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை பற்றிய கேள்விதானே?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் துணைக் கேள்விக்குத்தானே வாய்ப்புக் கேட்டிருக்கின்றீர்கள்? உங்களது மூலக் கேள்வி இன்னும் வரவில்லை. (குறுக்கீடு)*

திரு. எச். வசந்தகுமார்: *இல்லை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடம்தானே பொதுப் பணித் துறையும் உள்ளது? (குறுக்கீடு) பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அவரிடம் தானே உள்ளது? (குறுக்கீடு) கேள்வி அதுதான். இருந்தாலும் விவசாயிகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமான கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை என்பது மக்கள் பயணம் செய்வதற்கான சாலைகளை அமைப்பதற்காக அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு துறை. எங்கள் தொகுதி மிகவும் பெரிய தொகுதி. அதிகமாக மக்கள் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனது தொகுதியில் மங்கம்மா சாலை என்ற ஒரு சாலை இருக்கிறது. அந்தச் சாலை, நீண்ட நெடுங்காலமாக மேடும்*

பள்ளமுமாக இருந்து வருகிறது. அச்சாலையை சீர்செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். எங்கள் தொகுதியில் சுரங்கப்பாதையை அமைப்பதற்கு எந்தவொரு வாய்ப்பும் இல்லை. ஆகவே, நெடுஞ்சாலை துறை மூலமாக அந்த மங்கம்மா சாலையை சீர்செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் கேள்வி கேட்கலாம் அல்லவா? எனக்கும் ஒரு கேள்வி இருக்கின்றது. கேள்வி நேரத்தில் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தலாம் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் எதற்கு? கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தங்களிடம் இதற்கு பதில் இருக்கிறதா? (குறுக்கீடு) பதில் இல்லை என்று அமைச்சர் சொல்கின்றார். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இதற்கு தனிக் கேள்வி போடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறைக்கும் நெடுஞ்சாலைத் துறைக்கும் அமைச்சராக இருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். ஆற்றில் குடிதண்ணீர் இல்லாமல், பொது மக்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. எனவே, அமராவதி அணையிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், கேள்வியை கவனமாகப் பார்த்துவிட்டு, மூலக் கேள்விக்குத் தொடர்பான துணைக் கேள்வியைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர்களிடமும் அவற்றிற்கான பதில்கள்தான் இருக்கும். அப்படியில்லாமல் நீங்கள் வேறு கேள்வி கேட்பதாக இருந்தால், தனிக் கேள்வி போட்டால்தான் முடியும்.

வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.